தமிழ்நாடு அரசு

சுருக்கம்

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்(பொது) மற்றும் உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்–3, ஆகிய திட்டங்களில் சத்துணவு உட்கொள்ளும் 2 முதல் 15 வயது வரை உள்ள பயனாளிகளுக்கு வாரம் ஒரு முறை ஒரு முட்டை வழங்கும் திட்டத்தினை அமுல்படுத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉதி-3) துறை

அரசாணை (நிலை) எண். 95 நாள் 16-6-2004

படிக்கப்பட்டது:

1) அரசாணை (நிலை) எண். 99 சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 12-1-2001
2) அரசாணை (நிலை) எண்.154, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 22-10-2001

மேலும் படிக்கப்பட்டது:

3) திட்ட ஒருங்கிணைப்பாளர், உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3வது திட்டம் கடித எண். 11955/சஉதி-2/2004 நாள் 20-5-2004

****

ஆணை:-

தமிழகத்தில் தற்போது சத்துணவுப் பயனாளிகளுக்கு சத்துணவுடன் சேர்த்து ஒவ்வொரு வாரத்திலும் திங்கட்கிழமை ஒரு பயனாளிக்கு 20 கிராம் உருளைக்கிழங்கு, புதன்கிழமை 20 கிராம் பச்சைப் பயறு (முழு உருவில்), வெள்ளிக்கிழமையன்று 20 கிராம் கருப்புக் கொண்டைக் கடலை (முழு உருவில்) ஆகியவை வேகவைத்து வழங்கப்படுகின்றன.

2) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 18.05.2004 நாளன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கீழ்க்கண்ட அறிவிப்பினை அறிவித்துள்ளார்கள்.

" புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் அறிமுகப்படுத்தப் பட்ட சத்துணவுத் திட்டத்தின் மூலம் தற்போது 2 வயது முதல் 15 வயது வரையுள்ள அனைத்து குழந்தைகளும் பயன்பெற்று வருகிறார்கள். இந்த திட்டம் உணவு பாதுகாப்பு வழங்குகின்ற மிக முக்கியமான திட்டமாகும். இந்த திட்டத்தின் கீழ் பயன் பெறும் ஒவ்வொரு குழந்தையும் சரிவிகித சத்துணவு பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் வாரத்தில் ஒரு நாள் உருளைக் கிழங்கும் மேலும் இரண்டு நாட்கள் பருப்பு வகைகளும் வழங்கப்பட வேண்டும் என்று நான் ஏற்கெனவே ஆணையிட்டிருந்தேன். இந்த உணவை மேலும் சத்துள்ளதாக ஆக்க வாரத்தில் ஒரு நாள் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு முட்டை வழங்கிட தற்பொழுது நான் ஆணையிட்டுள்ளேன். வாரத்தில் ஒரு நாள் உருளைக் கிழங்கு, மற்றொரு நாள் பருப்பு வகைகள் என்பதுடன் கூடுதலாக முட்டை வழங்கப்படும்".

...வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், திட்ட ஒருங்கிணைப்பாளர், உலக வங்கி நிதியுதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3வது திட்டம் அவர்கள் திட்டத்திற்கான கருத்துரு ஒன்றை அனுப்பியுள்ளார்.

4) அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், திட்ட ஒருங்கிணைப்பாளர், உலக வங்கி நிதியுதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3-வது திட்டம் அவர்கள் அனுப்பியுள்ள கருத்துருவினை ஏற்று, சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் 2 வயது முதல் 15 வயது வரையுள்ள அனைத்து குழந்தைகள் மற்றும் மாணவ/மாணவிகளுக்கும் தற்போது வழங்கும் சத்துணவுடன் சேர்த்து கூடுதலாக முட்டை வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு, கீழ்க்கண்ட நடைமுறைகளை பின்பற்றலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

சத்துணவு பயனாளிகளுக்கு ஏற்கனவே உள்ள நடைமுறை திட்டத்தின்படி ஒவ்வொரு வாரத்திலும் திங்கட்கிழமை உருளைக்கிழங்கும், புதன்கிழமை பச்சைப்பயறு (முழு உருவில்), வெள்ளிக்கிழமை கருப்புக் கொண்டைக்கடலை (முழு உருவில்) வேகவைத்து சத்துணவுடன் சேர்த்து வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்குப் பதிலாக, தற்பொழுது வெளியிடப்படும் ஆணையின்படி, ஒவ்வொரு வாரத்திலும் திங்கட்கிழமை வேக வைத்த உருளைக்கிழங்கு, செவ்வாய்க்கிழமை ஏதேனும் ஒரு பயறு வகை ( பச்சைப் பயறு அல்லது கருப்புக் கொண்டைக்கடலை (முழு உருவில்)), வியாழக்கிழமை ஒவ்வொரு பயனாளிக்கும் ஒரு முட்டையினை வேகவைத்து, சத்துணவுடன் சேர்த்து வழங்கப்பட வேண்டும். பயறு வகை ஒவ்வொரு வாரமும் மாற்றி (Alternatively) வழங்கப்பட வேண்டும்.

சத்துணவுத் திட்டங்களின் கீழ் பயன் பெறும் 2 முதல் 15 வயது வரை உள்ள பயனாளிகளுக்குத் தேவையான முட்டைகளைப் பெற தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம், 1998 மற்றும் தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்ட விதிகள், 2000-ன் கீழ் இயற்றப்பட்ட விதிகளின்படி ஒப்பந்தப் புள்ளி கோரப்பட வேண்டும்.

முட்டைகளை சத்துணவு மையங்களுக்கே நேரடியாக சென்று விநியோகம் செய்ய, அதிக நாட்கள் ஆகும் என்பதைக் கருத்தில் கொண்டும் மற்றும் கூடுதல் போக்குவரத்துச் செலவினம் ஏற்படக்கூடும் என்பதனை கருத்தில் கொண்டும், முட்டை விநியோகத்தினை குறிப்பிட்டுள்ள நோக்கத்திற்குள் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் முட்டைகளை விநியோகம் செய்ய வேண்டும். ஊராட்சி ஒன்றியத்திலிருந்து சம்பந்தப்பட்ட சத்துணவு மற்றும் அங்கன்வாடி மையங்களுக்கு முட்டைகளை கொண்டு செல்ல ஊராட்சி ஒன்றிய ஆணையர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மாநகராட்சிகளைப் பொருத்தவரை தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மையங்களுக்கே நேரடியாக விநியோகம் செய்ய வேண்டும்.

வாரத்தின் இறுதி நாட்களில் மையங்களில் முட்டைகளை இருப்பில் வைப்பதை தவிர்க்கும் பொருட்டு முட்டை விநியோகத்தை முறைப்படுத்தி ஒவ்வொரு வாரத்திலும் வியாழக்கிழமை பயனாளிகளுக்கு முட்டை வழங்கப்பட வேண்டும்.

திட்ட ஒருங்கிணைப்பாளர், உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்-3 அவர்களால் தமிழ்நாடு திறந்த வெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998ன் கீழ், அனைத்து மாவட்டங்களுக்கும் / மாநகராட்சிகளுக்கும் தனித்தனியே ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, குறைந்த விலையில் ஒப்பந்தப்புள்ளி கோரிய நபரை முடிவு செய்ய வேண்டும். இதனால், ஒப்பந்தக்காரர்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித் தனியாக விலைப் புள்ளிகளை குறிப்பிடுவார்கள் மற்றும், ஒவ்வொரு மாவட்டத்திலும் / மாநகராட்சியிலும், மிகக் குறைந்த ஒப்பந்தப் புள்ளிதாரர் (L1 Tenderer) விதிகளுக்குட்பட்டு தேர்ந்தெடுக்கப்படுவர். இவ்வகையினால் அனைத்து மாவட்டங்களிலும்/மாநகராட்சிகளிலும் முட்டை விநியோகம், தடங்கல் இன்றி நடைபெறுவதை உறுதி செய்யப்பட வேண்டும்.

அரசால் வெளியிடப்படும் ஆணைக்குப் பிறகு, தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம், 1998ன் கீழ், ஒப்பந்தப்புள்ளி கோருவது, ஒப்பந்தப் புள்ளிகளை ஆய்வு செய்வது, பின் ஒப்பந்தப்புள்ளியில் (Tender) கலந்து கொண்ட ஒப்பந்தக்காரர்கள் கூட்டத்தை கூட்டுவது, L1 குறைந்த விலைப்புள்ளியில் விலைப் பட்டியல் அளித்த ஒப்பந்ததாரர்களை இறுதி செய்வது ஆகியவற்றிற்கு குறைந்தபட்சம் இரண்டு மாத காலம் ஆகலாம் என கருதுவதால், ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் வரை சத்துணவு மற்றும் அங்கன்வாடி மையங்களில் பயன்பெறும் 2 முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகள் மற்றும் மாணவ/மாணவிகளுக்குத் தேவையான முட்டைகளை கொள்முதல் செய்ய, வாராந்திர குறுகிய கால ஒப்பந்தப்புள்ளிகளை (Limited Tender System) கோர மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

தமிழ்நாடு திறந்த வெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 (Tamil Nadu Transparency in Tenders Act,1998) மற்றும் தமிழ்நாடு திறந்த வெளி ஒப்பந்தப்புள்ளி சட்ட விதிகள் 2000-ன் கீழ் திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், ஒப்பந்தப்புள்ளிகளை பெற மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளை ஆய்வு செய்வதற்கும் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்யும் அதிகாரத்தை திட்ட ஒருங்கிணைப்பாளர், உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்-3 அவர்களுக்கு வழங்கப்படுகிறது. திட்ட ஒருங்கிணைப்பாளரால் முடிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரருடன் உரிய ஒப்பந்தம் செய்து கொள்ள சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது.

கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகளை பரிசீலனை செய்யக் குழு ஒன்று (Tender Committee) அமைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1.திட்ட ஒருங்கிணைப்பாளர் | தலைவர் |
| 2.சமூகநல இயக்குநர் | உறுப்பினர் |
| 3. நிதித் துறை பிரதிநிதி ஒருவர் | உறுப்பினர் |
| 4. கால்நடைத்துறை இயக்குநர் | உறுப்பினர் |
| 5.இணைச் செயலாளர், சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | உறுப்பினர் |

6.இணை ஒருங்கிணைப்பாளர்
(Nutrition)

உறுப்பினர்

7.முதன்மை கணக்கு அலுவலர் — உறுப்பினர்
(உலக வங்கி உதவி பெறும்
ஒருங்கிணைந்த குழந்தை
வளர்ச்சித் திட்ட
ஒருங்கிணைப்பாளர் அலுவலகம்)

மாநகராட்சி பகுதிகளுக்கென தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தக்காரர்கள் சத்துணவ மற்றும் அங்கன்வாடி மையங்களுக்கு நேரடியாகவே முட்டைகளை விநியோகம் செய்ய வேண்டும். இதற்கான போக்குவரத்துச் செலவினம் முட்டையின் அடக்கவிலையுடன் உள்ளடங்கியிருக்கும். தனியாக போக்குவரத்துச் செலவினம் ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கத் தேவையில்லை. மாநகராட்சிகள் தவிர இதர மையங்களைப் பொருத்தவரையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்கள ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் முட்டைகளை விநியோகம் செய்ய வேண்டும். இதற்கென ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து சத்துணவு மற்றும் அங்கன்வாடி மையங்களுக்கு முட்டைகளை விநியோகம் செய்ய ஊராட்சி ஒன்றியங்களுக்கு முட்டை ஒன்றுக்கு தனியாக 5 பைசா முதல் 8 பைசா வரை போக்குவரத்துச் செலவினமாக வழங்கப்படும்.

கால்நடைத் துறை அலுவலர்களின் மேற்பார்வையில் முட்டை விநியோகம் செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் "தமிழ்நாடு அரசு" என்ற முத்திரையினை முட்டைகளின் மீது கீழ்கண்ட நிறங்களில் இட வேண்டும்.

| | |
|---|---|
| முதல் வாரம் | பச்சை நிறம் |
| இரண்டாவது வாரம் | சிவப்பு நிறம் |
| மூன்றாவது வாரம் | கருப்பு நிறம் |
| நான்காவது வாரம் | நீல நிறம் |
| ஐந்தாவது வாரம் (தேவைப்படின்) | சிவப்பு நிறம் |

ஊராட்சி ஒன்றிய ஆணையர் அவர்கள் முட்டைகளை பெற்றவுடன் தக்க இருப்புக்கான பதிவுகள் (Stock Entry) இருப்புப் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும். பின்னர், இருப்புப் பதிவு சான்றிதழை (Stock Entry Certificate) சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) அவர்களிடம் வழங்க வேண்டும். இதன் அடிப்படையில், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) அவர்கள் பட்டியல்களை தீர்வு (Settlement) செய்ய வேண்டும். மாநகராட்சி பகுதிகளிலுள்ள மையங்களுக்கு முட்டைகள் நேரடியாக விநியோகம் செய்யப்படுவதால், சம்பந்தப்பட்ட சத்துணவு அமைப்பாளர் மற்றும் அங்கன்வாடி பணியாளர் இருப்புப் பதிவு சான்றிதழை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையர் / மாநகராட்சி ஆணையர் அவர்களிடம் வழங்க வேண்டும். இவ்வலுவலர்கள் அதனை சரிபார்த்து சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) அவர்களிடம் பட்டியலை தீர்வு செய்வதற்காக வழங்க வேண்டும். இதன்படி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) அவர்கள் பட்டியல்களை தீர்வு செய்வார். சென்னை மாநகராட்சியை பொறுத்தவரை அங்கன்வாடி பணியாளர் இருப்புப் பதிவு சான்றிதழை சம்பந்தப்பட்ட

குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலரிடம் வழங்க வேண்டும். குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள், மாவட்ட திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள், சென்னை அவர்களிடம் வழங்க வேண்டும். சென்னை மாவட்ட திட்ட அலுவலர் அவர்கள் இருப்புப் பதிவுச் சான்றிதழினை அடிப்படையில் முட்டைகளை பெற்றதற்கான பட்டியல்களை பெற்று தீர்வு செய்வார். சென்னை மாவட்டத்திலுள்ள மாநகராட்சி பள்ளிச் சத்துணவு அமைப்பாளர்கள் முட்டைகளுக்கான இருப்புப் பதிவு சான்றிதழை கூடுதல் கல்வி அலுவலர் (AEO) அவர்களிடம் வழங்க வேண்டும். இருப்புப் பதிவு சான்றிதழை கூடுதல் கல்வி அலுவலர் சரிபார்த்து மாவட்ட திட்ட அலுவலர் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள் சென்னை அவர்களிடம் வழங்க வேண்டும். இதன் அடிப்படையில் சென்னை மாவட்ட திட்ட அலுவலர் பட்டியலை தீர்வு செய்வார்.

xii) மாவட்ட/வட்டார அளவில் முட்டைகள் சத்துணவு பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்படுவதை ஆய்வு செய்ய கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட ஆய்வுக் குழுக்கள் (Monitoring Committee) ஏற்படுத்தப்படுகின்றன

மாவட்ட அளவிலான குழு
District Level Committee

| | |
|---|---|
| 1. மாவட்ட ஆட்சித் தலைவர் | தலைவர் |
| 2. மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் | உறுப்பினர் |
| 3. மாநகராட்சி பிரதிநிதி | உறுப்பினர் |
| 4. நகராட்சித் துறை பிரதிநிதி | உறுப்பினர் |
| 5. உதவி இயக்குநர் (ஊராட்சி) | உறுப்பினர் |
| 6. மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) | உறுப்பினர்– செயலர் |
| 7. மாவட்ட திட்ட அலுவலர் (ICDS) | உறுப்பினர் |
| 8. இணை இயக்குநர், கால்நடைத் துறை | உறுப்பினர் |

வட்டார அளவிலான குழு
Block Level Committee

| | |
|---|---|
| 1. உதவி இயக்குநர்(ஊராட்சி) | தலைவர் |
| 2. வட்டார வளர்ச்சி அலுவலர் | உறுப்பினர்– செயலர் |
| 3. குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் | உறுப்பினர் |
| 4. கால்நடைத்துறை பிரதிநிதி | உறுப்பினர் |
| 5. ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் | உறுப்பினர் |
| 6. ஊராட்சி மன்றத் தலைவர் (மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நியமனம் செய்யப்பட்டவர்கள்) | உறுப்பினர் |

இந்திட்டத்திற்கு முட்டை ஒன்றுக்கு ரூ.1.20 வீதம் ஆண்டொன்றுக்கு தோராயமாக கோடி (ரூபாய் நாற்பத்து ஆறு கோடியே இருபத்தி ஆறு இலட்சம் மட்டும்) யும், களைத் தவிர ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள சத்துணவு மற்றும் அங்கன்வாடி [illegible] ஊராட்சி ஒன்றியங்களுக்கு போக்குவரத்துச் செலவினமாக [illegible] வகையில் ஆண்டொன்றுக்கு ரூ.3.08 கோடி [illegible] கோடியே எட்டு இலட்சம் மட்டும்) யும் செலவினம் மேற்கொள்ள நிதி ஒப்பளிப்பு ஆணையிடுகிறது.

த்திட்டத்திற்காக ஆகும் செலவினத்தை முதலில் நடப்பு நிதியாண்டான 2004-ரிய திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய மதிப்பீட்டில் தேவையான நிதியொதுக்கத்தை இச் செலவினம் மேற்கொள்ளப்படும்.2004-2005ம் ஆண்டிற்கான திருத்திய றுதி திருத்திய மதிப்பீட்டில் நிதியொதுக்கத்தை எதிர்நோக்கி மேலே பத்தி 5ல் ஒப்பளிப்பு செலவினத்தை மேற்கொள்ள திட்ட ஒருங்கிணைப்பாளர், உலக வங்கி உதவிபெறும் ந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3வது திட்டம் அவர்களுக்கு அதிகாரம் கிறது. இத்திட்டத்திற்காகும் மொத்தச் செலவினத்தை நடப்பு நிதியாண்டிற்கான துணை மதிப்பீடுகளில் (Supplementary Estimates) சேர்ப்பதற்கான கருத்த வை, திட்ட ஒருங்கிணைப்பாளர், உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை பணிகள் 3வது திட்டம் அவர்கள் நிதித்துறைக்கு உரிய நேரத்தில் அனுப்ப டுகிறார்.

த்துணவு மையங்களில் பயனாளிகளுக்கு வழங்கப்படும் ஒரு முட்டையின் எடை 46 ம் 12 முட்டைகள் சேர்த்து 552 கிராம் என்ற எடைக்குக் குறையாமல் இருப்பதை வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர்கள், முட்டைகளை வழங்கும் போது, க்க உரிய முறையில் பாதுகாப்பு உறையுடன் விநியோகம் செய்ய வேண்டும்.

துணவு மையங்களில் சத்துணவு உட்கொள்ளும் குழந்தைகள் மற்றும் மாணவ / க்கு தரமான முட்டைகள் வழங்கும் பொருட்டு கீழ்க்கண்டவாறு அறிவுரைகள் படு.

கெட்டுப் போன முட்டைகளை முழுவதுமாக நீக்கும் பொருட்டு, ஒப்பந்ததாரர்கள் வங்கும் முட்டைகளை விநியோகத்திற்காக ஏற்றும் இடத்திலேயே அவைகள் மானவையா என்று சரிபார்க்க வேண்டும்.

மையங்களுக்கு குறிப்பிட்ட தினத்தில் முறையாக முட்டைகள் விநியோகம் ய்யப்படுகின்றனவா என்பதை மையங்களில் சரிபார்த்து குறைபாடுகளை டியாக சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தெரிவிக்க வேண்டும்.

துணவு அமைப்பாளர் மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் முறையாக முட்டைகளை ங்குவதையும், தரமான முட்டை தானா என்பதையும் உறுதி செய்து ஒவ்வொரு றும், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தெரிவிக்க வேண்டும்.

ற்ற முட்டைகள் அல்லது கெட்டுப் போன முட்டைகள் அல்லது குளிர் பதனக் ங்குகளில் வைக்கப்பட்டுள்ள முட்டைகளை மையங்களுக்கு விநியோகிக்கும் ப்பந்ததாரர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ம் திட்ட ஒருங்கிணைப்பாளர், உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த

குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3வது திட்டம் ஆகியோருக்கு அறிவுரை வழங்கப்படுகிறது.

v) தரமற்ற முட்டைகள் அல்லது கெட்டுப் போன முட்டைகள் அல்லது குளிர் பதன கிடங்குகளில் வைக்கப்பட்ட முட்டைகளை எக்காரணம் கொண்டும் சத்துணவ மையங்களுக்கு விநியோகிக்காமல் இருப்பதை தீவிரமாக கண்காணிக்க வேண்டும். இது தொடர்பாக, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட சுகாதார அலுவலர்கள் மற்றும் கால்நடைத் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்துமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

i) அரசாணை (நிலை) எண்.499, பிற்படுத்தப்பட்டோர் நலம், சத்துணவு மற்றும் சமூக நலத் துறை, நாள் 22–5–1989 பத்தி 4ல் (இனம் (f) தவிர) ஆணையிடப்பட்ட நெறிமுறைகளை தவறாமல் கடைபிடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

) இத்திட்டமானது 28-6-2004 முதல் அமுலுக்கு வருகிறது. மாவட்ட ஆட்சித் ர்கள் இத்திட்டத்தினை குறிப்பிட்ட நாள் முதல் அமுல்படுத்த துரித நடவடிக்கை காள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

10) இத்திட்டத்திற்கான செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று ப்பட வேண்டும்.

த்துணவு-02-சத்துணவு, பானங்கள் வழங்கல்-102 மதிய உணவு-பத்தாவது நித் திட்டப்பணிகள்-II மாநிலத் திட்டம்-KI புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவத் ன் கீழ் பயன்பெறுவோர்க்கு புரதச் சத்துணவு வழங்குவதற்காகத் தொகை கொடுத்தல்- வளிக்கும்/உணவுச் செலவுகள்–05.முட்டைகள்" (த.தொ.கு. 2236-02-102-KI-6753) குவரத்துச் செலவுகள் (த.தொ.கு 2236-02-102-KI-7305)

இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன் அத்துறையின் அசா.எண்.382/நி1/ ன்.ா)/2004-1 நாள் 16-6-2004 ன்படி வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதி ஒதுக்கப் ஓ.179.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி.கே.கரியாலி
அரசு செயலாளர்

கிணைப்பாளர், உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் த திட்டம், சென்னை-113
ர் இயக்குநர், சென்னை-15
ாக ஆணையர், சென்னை-5
க்குநர், சென்னை-5
சென்னை மாநகராட்சி, சென்னை
ாருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை-5
அனைத்து மாநகராட்சிகள்